بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 14/10/2022 அன்று அமெரிக்காவி(ன், மெரீலாண்டி)லுள்ள பைத்துர் ரஹ்மான் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

நாம் பைஅத்தின உரிமையை செலுத்த வேண்டும் என்றால், நாம் அல்லாஹ்வின் பேருபகாரங்களுக்கு நன்றி செலுத்துபவர்களாக ஆக வேண்டும் என்றால், நாம் எப்போதும் நமது நிலைமைகளை ஆய்வு செய்ய வேண்டி தேவை இருக்கிறது.

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

அல்லாஹுத்தஆலா நம் மீது செய்துள்ள அனைத்தையும் விட பெரும் உபகாரம் யாதெனில், அவன் நமக்கு ரஸுலுல்லாஹி (ஸல்) அவர்களது உண்மை அடியாராகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பை வழங்கியுள்ளான். இந்த பேருபகாரத்திற்கு உண்மையான முறையில் நன்றி செலுத்துவது என்பது நாம் அல்லாஹ்வின் கட்டளைகளின் படி நடப்பதே ஆகும். அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய கடமைகள் மற்றும் அடியார்களின் உரிமைகளை செலுத்துவதற்குத் தயாராக இருக்க வேண்டும். இது நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தின் உரிமையை நிலைநாட்ட முயற்சி செய்யும்போது தான் சாத்தியமாகும். நாம் உண்மையான முஸ்லிமாக ஆவதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பக்கம் பார்க்க வேண்டும். அன்னார் எடுத்துரைத்த வழிமுறையின் அடிப்படையில் நமது வாழ்வினை வாழ வேண்டி உள்ளது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம் மீது முழுமையான நம்பிக்கை மற்றும் ஈமான் கொள்வதன்பால் அறிவுறுத்தியவாறு கூறுகிறார்கள்: எவர் ஒருவர் ஈமான் கொள்கிறாரோ அவர் தனது ஈமானிலிருந்து உறுதியான நம்பிக்கை மற்றும் இறை ஞானம் வரை முன்னேற்றம் அடைய வேண்டும். பிறகு அவர் யூகத்தில் அடைபட்டு விடக்கூடாது. மேலும் கூறுகிறார்கள்: இப்போது நீங்களே சிந்தியுங்கள். மேலும் உங்களது உள்ளத்தில் தீர்மானம் எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எனது கையில் பைஅத் செய்துள்ளீர்கள். மேலும், என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹாக, நியாயவானாக, நீதிமானாக ஏற்றுக் கொண்டீர்கள் எனில், அதற்குப் பிறகு எனது ஏதேனும் ஒரு தீர்மானம் அல்லது செயலின் மீது உள்ளத்தில் ஏதேனும் வேதனை ஏற்பட்டால் உங்களது ஈமானைக் பற்றி கவலை கொள்ளுங்கள். எவர் ஒருவர் என்னை ஏற்றுக் கொண்ட பிறகும் கூட

ஆட்சேபனைக் கொண்டிருக்கின்றாரோ அவர் இன்னும் துரதிஷ்டசாளியாவார். அவர் கண்ணிருந்தும் குருடராவார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் அன்னாருக்கு முன்பு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களுக்குப் பிறகு கிலாஃபத்திற்கான நற்செய்தியை வழங்கியிருந்தார்கள். அஹ்மதிய்யா கிலாஃபத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வழிமுறைதனையே தொடரச் செய்யும் அமைப்பாகும். தனது உறுதிமொழியில் ஒவ்வோர் அஹ்மதியும் அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் தொடர்பு மற்றும் கட்டுப்படுவதற்கான உறுதியை எடுக்கிறார்கள். இவ்வகையில் கிலாஃபத்துடனான தொடர்பு குறித்த உறுதி மொழியை நிறைவேற்ற வேண்டியது ஒவ்வோர் அஹ்மதியின் கடமையாகும். இல்லாவிடில் பைஅத் முழுமையற்றதாகும்.

திருக்குர்ஆனை கவனத்துடன் ஓதுவதன் பால் கவனமூட்டியவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நான் மீண்டும் மீண்டும் என்னுடன் தொடர்பு கொண்டிருக்கின்ற மக்களுக்கு இவ்விஷயத்தின் பால் அறிவுறுத்தி கூறுகின்றேன். இறைவன் இந்த ஜமாஅத்தை உண்மைகளை வெளிப்படுத்துவதற்காக நிலைநாட்டியுள்ளான். செயல் அளவிலான உண்மையின் வாயிலாக இஸ்லாத்தின் சிறப்பு உலகிற்கு வெளிப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இறைவன் என்னை இந்தப் பணிக்காகவே நியமித்துள்ளான். எனவே, திருக்குர்ஆனை அதிகம் அதிகமாக ஓதுங்கள். ஆனால் கட்டுக்கதையாக எண்ணி அல்ல; மாறாக, ஒரு தத்துவமாகக் கருதி ஓதுங்கள். நாம் உலக பணிகளில் மூழ்கி விட்டால், நமது பிள்ளைகள் மற்றும் சந்ததிகள் மார்க்கத்தை விட்டு விலகிச் சென்று விடுவார்கள். ஆகவே இவை மிகவும் சிந்திக்க வேண்டிய விஷயங்கள் ஆகும். பைஅத் செய்வதனால் மட்டுமே நோக்கம் நிறைவேறிட முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்ப நம்மை ஆக்கிக் கொள்ளும் போது தான் நோக்கம் நிறைவேறும். எப்போதுவரை நாம் திருக்குர்ஆனை ஓதி அதன்படி செயல்படவில்லையோ அப்போது வரை அந்த நோக்கம் நிறைவேற முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: உண்மையான விஷயம் யாதெனில், தற்சமயம் நிரந்தர வாழ்க்கைக்காக இறைவன் உருவாக்கியுள்ள அந்த ஊற்றிற்கு அருகில் நீங்கள் வந்து சேர்ந்துள்ளீர்கள். ஆயினும் தண்ணீர் அருந்துவது எஞ்சியுள்ளது. அவன் உங்களை செழிப்புறச் செய்ய இறைவனது அருள் மற்றும் கருணையின் நல்வாய்ப்பை நாடுங்கள். ஏனென்றால், இறைவனை அன்றி ஒன்றும் நடக்க முடியாது. இந்த ஊற்றிலிருந்து அருந்துபவர் அழிவிற்குள்ளாக மாட்டார் என்பதை நான் நிச்சயம் அறிவேன். ஏனென்றால், இந்த நீரானது வாழ்க்கையை வழங்குகிறது. இந்த நீரூற்றிலிருந்து தாகம் தீர்க்க என்ன வழிமுறை? அது யாதெனில், இறைவன் உங்கள் மீது நிலை நாட்டியுள்ள அந்த இரண்டு உரிமைகளை நிறைவேற்றுங்கள். அதனை நன்றாக்குங்கள்.

முழுமையாக நிறைவேற்றுங்கள். அவற்றில் ஒன்று இறைவனுக்குரிய கடமை. மற்றொன்று படைப்பினங்களுக்குரிய உரிமையாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: பைஅத் செய்வது மட்டுமே போதுமானது அல்ல. அல்லாஹுத்தஆலா செயலை நாடுகிறான். எவரொருவர் அமல் புரிவாரோ அவர் ஒருபோதும் அழிந்து விட மாட்டார். மேலும் என்றென்றைக்கும் அல்லாஹ்வின் அருளைப் பெறுவார். லா இலாஹ இல்லல்லாஹ் உங்களது அகம் மற்றும் புறத்தின் குரலாக ஆகிவிடும் போது, மேலும், உங்களுக்கு அல்லாஹ்வின் திருப்தியைத் தவிர வேறு எந்தப் பொருளின் நாட்டமும் இல்லாமல் இருக்கும்போது, அல்லாஹுத் தஆலாவின் கட்டளைகளுக்கு முழுமையாகக் கட்டுப்படும்போது இந்த செயல் நிலை உருவாகும். இப்போது ஒவ்வொருவரும் இந்த விஷயத்தைத் தன்னுள் ஆராய்ந்து பார்க்க முடியும். அதாவது, நாம் கலிமா கூறும் போது உண்மையிலேயே அல்லாஹுத் தஆலாவின் விருப்பத்தைப் பெரும் நோக்குடன் நாம் ஓதுகின்றோமா? நாம் அவனது கட்டளைகளுக்குக் கட்டுப்படுகின்றோமா?

தொழுகைகளின் நேரத்தில் உலக வேலைகளை விட்டுவிட்டு தொழுவதன் பால் நமது கவனம் இருக்கவில்லை என்றால், நாம் வாயளவில் கலிமாவை ஓதுகின்றோம் தான்; ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான இணைவைத்தல் நமது உள்ளத்தில் இருக்கின்றது. ஒரு நம்பிக்கையாளர் எனது வியாபாரத்தில், மேலும் என்னுடைய பணிகளில் அல்லாஹ்வின் அருளாலேயே அருள் ஏற்படுகின்றது என்ற நம்பிக்கையில் நிலைத்திருக்கின்றார். பிறகு எனது பௌதீக பணிகள் அல்லாஹுத்தஆலாவின் குரலுக்கு நிகராக எவ்வாறு நிற்க முடியும்? அவ்வாறாக இருந்தால் நாம் கலிமாவின் ஆன்மாவைப் புரிந்து கொள்ளவே இல்லை. நாம் வாயளவில் கலிமாவை ஒப்புக்கொள்கிறோம் தான். ஆனால் நமது செயல் நமது ஒப்புக் கொள்ளுதலுடன் ஒத்துழைப்பதில்லை. இவ்வாறு இருக்குமே என்றால், பிறகு பைஅத்தின் உரிமை நிலை பெறவில்லை.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹுதஆலா அடியார்களின் உரிமைகளை செலுத்துவதன்பால் கவனமூட்டி உள்ளான். இவை செலுத்தப்படுமேயெனில் பிறகு ஒருவன் உண்மையான முஃமினாக ஆகின்றான். மேலும், பைஅத்தின் உரிமையை செலுத்துகின்றான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஜமாஅத்திற்கு அறிவுரை கூறியவாறு கூறுகிறார்கள்: நீங்கள் உலக வாதிகளைப் போன்று இருந்தீர்கள் என்றால், எவ்வித பலனும் இல்லை. எனது கையில் தவ்பா செய்வது என்பது ஒரு மரணத்தை நாடுகிறது. அப்போதுதான் நீங்கள் இன்னொரு புதிய வாழ்க்கையைப் பெற முடியும். உங்களுக்கு ஆன்மீக வாழ்க்கை கிடைக்கவில்லை என்றால், பிறகு அப்படிப்பட்ட பைஅத் எவ்வித பலனையும் தராது. என்னுடைய பைஅத்தினால் இறைவன் உள்ளத்தின் உறுதியை நாடுகின்றான். உண்மையான உள்ளத்தால் என்னை ஏற்றுக் கொள்கின்றவரை, தனது பாவங்களிலிருந்து தவ்பா செய்கின்றவரை

இறைவன் மன்னித்து விடுகின்றான். மேலும் அவர் தாயின் வயிற்றிலிருந்து வெளியே வந்தவரைப் போன்று ஆகிவிடுகின்றார்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: நமது இறை வணக்கங்கள் கலப்பற்றதாகவும் செயல்கள் அல்லாஹ்வின் திருப்தியை பெறக்கூடியதாகவும் இருக்க வேண்டும். இன்றைய உலகின் சூழ்நிலையில் இருந்து, அழிவின் மிகவும் அபாயகரமான மேகங்கள் சூழ்ந்துள்ளன என்று தெரிய வருகிறது. ஏற்படவிருக்கின்ற அழிவு உலகத்தின் முடிவுக்கு வழிவகுக்கக் கூடியதாக இருக்கும். ஆக தற்போது அஹ்மதிகளின் பணியாவது அவர்கள் துஆக்களைப் பயன்படுத்த வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நல்ல மக்களுக்காக அல்லாஹ் பிறரையும் காப்பாற்றி விடுகின்றான். நாம் மிகவும் அபாயகரமான காலகட்டத்தைக் கடந்து கொண்டிருக்கின்றோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் எவரும் காப்பாற்ற முடியும் என்றால், அது அல்லாஹுத் தஆலாவின் இருப்பு மட்டுமே ஆகும். உங்களையும் உங்களது சந்ததிகளையும் அவனுக்கு முன்னால் குனிபவர்களாக ஆக்குங்கள். அப்போதுதான் நீங்களும் உங்களது சந்ததிகளும் பாதுகாப்பாக இருக்க முடியும். லா இலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவின் உரிமையை நாம் நிலை நாட்ட கூடியவர்களாக இருப்போம் என்றால், அல்லாஹுத்தஆலா நமது நல்ல செயல்களினால் உலகத்தையும் காப்பாற்றி விடுவான். உலகின் சூழ்நிலை எல்லையை மீறி சீர்குலைந்து விடுவதற்கு முன்னதாக அதிகம் அதிகமாக துஆ செய்யுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: குறித்த நேரத்திற்கு முன்பு செய்வதே நன்மையாகும். பிறகு செய்தால் எவ்வித பலனும் இருக்காது. கப்பல் மூழ்கும் போது அனைவரும் அழுகிறார்கள். ஆனால் கப்பல் மூழ்கிக் கொண்டிருக்கும் போது அழுது புலம்புவது எந்தப் பலனையும் தர முடியாது. அது அமைதியான சூழ்நிலையில் மட்டுமே பலன் தருவதாக இருக்கும். மனிதன் குறித்த நேரத்திற்கு முன்பே இடி விழுந்து விடுமோ என்று விழித்திருப்பது போன்று விழித்திருப்பதே இறைவனை அடைவதற்கான யுக்தி ஆகும். ஆனால் அவன் மீது இடி விழும் போது இடி விழுவதைப் பார்த்து கூச்சலிடுகின்றான். அவன் இடியின் அச்சத்தினாலேயே அன்றி, இறைவனுடைய அச்சத்தால் கூச்சலிடுவதில்லை.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இன்று அஹ்மதிகளின் ஈமான் மற்றும் அல்லாஹ்ஹுத்தஆலாவுடனான தொடர்பு மற்றும் துஆக்கள் மட்டும் தான் உலகை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும். உலக வாசிகள் மீது அனுதாபத்தை உருவாக்கிக் கொண்டு உலகிற்காக துஆக்கள் செய்யுங்கள். அல்லாஹ்வுக்கான கடமைகள் மற்றும் அடியார்களின் உரிமைகளின் பால் கவனம் செலுத்தவில்லை என்றால், இந்த உலகம் பாழடைந்ததாக மாறிவிடக் கூடும். ஆகவே ஒவ்வோர் அஹ்மதியும் இந்த சிந்தனையுடன் தங்களது கடமைகளை நிறைவேற்றுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: பாருங்கள்! நீங்கள் சிறிது உழைத்து வயல்வெளியை ஆயத்தம் செய்யும்போது பலனுக்கான நம்பிக்கை ஏற்படுகின்றது.அதேபோன்று அமைதியான நாட்கள் உழைப்பிற்கானவை ஆகும். இப்போது இறைவனை நினைவு கூறுவீர்கள் என்றால், பலனை அடைவீர்கள். தற்போது துஆக்கள் செய்தீர்கள் என்றால், அந்தக் கருணையாளனும் கண்ணியத்திற்குரியவனும் ஆகிய இறைவன் அருள் புரிவான். அல்லாஹுத்தஆலா இந்தத் துன்பத்தை அகற்றி தண்டனையிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்று தொழுகைகளில் ருகூவில், ஸஜ்தாக்களில் துஆக்களை செய்யுங்கள். துஆ செய்கின்றவர் ஒருபோதும் விலக்கப்படுவதில்லை. துஆ செய்கின்றவர் கொல்லப்படுவது என்பது சாத்தியமற்றதாகும். அவ்வாறாக இருந்தால், இறைவன் ஒருபோதும் கண்டறியப்பட மாட்டான். அவ்வாறே செய்தீர்கள் எனில், முழுமையான முறையில் உங்களிடம் உண்மையான கலப்பற்ற தன்மை உருவாகி விடும்.

இன்றும் அவ்வாறே அழிவின் அறிகுறிகள் தென்படுகின்றன. அதற்காக நாம் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் குனிய வேண்டும். ஏனென்றால் உலகை அழிவிலிருந்து பாதுகாப்பாக இருக்கச் செய்வதற்கு இதுவே வழியாகும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: உயர்ந்த நற்பண்புகளைக் காண்பிப்பதும் அல்லாஹுத்தஆலாவின் கட்டளைகளுள் ஒரு கட்டளை ஆகும். மேலும் கூறினார்கள்: நாவின் தீய ஒழுக்கங்கள் பகைமையில் விழச் செய்து விடுகின்றன. எனவே, உங்களுடைய நாவினை எப்போதும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். இஸ்லாம் எங்கு நற்பண்புகளின் எல்லைக்குள் இருக்க போதனை வழங்குகின்றதோ அங்கு சட்ட வரம்பிற்குள்ளும் இருப்பதற்கு வலியுறுத்துகின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: அஹ்மதிகளிடம் இருக்க வேண்டிய மற்றுமொரு சிறப்பு யாதெனில், பரஸ்பரம் அன்பு மற்றும் சகோதரத்துவத்தை உருவாக்குங்கள். ஒருவர் மற்றவருடன் உண்மையான அனுதாபம் கொள்ளவில்லை என்றால், நமது ஜமாஅத்தில் பசுமை ஏற்பட முடியாது. அன்னார் கவனமூட்டினார்கள், அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்து நாம் ஒரு ஆன்மீக தந்தையின் பிள்ளைகளாக ஆகிவிட்டோம். மேலும் எவருக்கும் மற்றவர் மீது எவ்வித மேன்மையும் கிடையாது.

மேலும் கூறினார்கள்: அல்லாஹுத்தஆலா நமது ஜமாஅத்தை ஒரு முன்னுதாரணமாக ஆக்க விரும்புகின்றான். ஆக வெறும் வெளிப்படையான வார்த்தைகளை மட்டுமே கொண்டிருந்து ஆழமான செயல்கள் இன்றி முன்னுதாரணமாக ஆக முடியுமா? அதற்காகப் பெரிய ஜிஹாத் மற்றும் பெரும் முயற்சியை மேற்கொள்ள வேண்டியுள்ளது. தங்களது இறை வணக்கங்களின் தரத்தை உயர்த்தியவாறு மற்றும் தங்களது நற்பண்புகளின் நிலைகளின் தரத்தை சீர் செய்தவாறும், பரஸ்பரம் அன்பு மற்றும்

சகோதரத்துவத்தின் தரத்தை நிலைநாட்டியவாறும் நாம் அந்த முன்னுதாரணமாக ஆகின்றோமா இல்லையா என்று பார்க்க வேண்டியுள்ளது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹுத்தஆலா இறையச்சம் உடையவரை நேசிக்கின்றான். அல்லாஹுத்தஆலாவின் மேன்மையை நினைவு கூர்ந்தவாறு அனைவரும் அஞ்சிக் கொண்டிருங்கள். அதாவது, அல்லாஹுத்தஆலா மீதானே அச்சத்தை உள்ளத்தில் உருவாக்குங்கள். நினைவில் கொள்ளுங்கள்! அனைவரும் அல்லாஹ்வின் அடியார்களாவர். எவர் மீதும் அநீதி இழைக்காதீர்கள். எவரையும் ஏளனமாக் பார்க்காதீர்கள். ஒரு மனிதர் அசுத்தமாக இருக்கின்றார் என்றால், அவர் அனைவரையும் அசுத்தமாக்கி விடுகின்றார். உயர்ந்த கண்ணியமும் உயர்ந்த நல்லொழுக்கமும் இறையச்சத்தின் உயர்ந்த தரம் ஏற்படுகின்ற போது உருவாகின்றன.

நமது ஜமாஅத்தின் மக்கள் இறைவன் புறமிருந்து வந்தவர் என்று வாக்குறுதி அளித்துள்ள மனிதருடன் தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள். நமது ஜமாஅத் மக்கள் அவர்களிடம் இறையச்சம் இருக்கின்றதா இல்லையா என்ற கவலையை பௌதிக பணிகளை விட அதிகமாக தங்களுடைய உள்ளத்தில் கொண்டிருக்க வேண்டும். எனவே நாம் பைஅத்தின் உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்றால், நாம் அல்லாஹ்வின் பேருபகாரங்களுக்கு, அவனுக்கு நன்றி செலுத்துபவர்களாக ஆக வேண்டும் என்றால், நாம் எந்நேரமும் நமது நிலைமைகளை ஆராய்வது அவசியமாகும்.

அல்லாஹுத்தஆலா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது விருப்பங்களுக்கு ஏற்ப நமது வாழ்க்கைகளை அமைத்துக் கொள்பவர்களாக நாம் ஆக நமக்கு நல்வாய்ப்பை வழங்குவானாக! நாம் மார்க்கத்திற்கு உலகை விட முன்னுரிமை வழங்குபவர்களாக ஆக வேண்டும். அல்லாஹுத்தஆலா மீதான அச்சம் நம்முள் உருவாகி விட வேண்டும். நாம் உண்மையில் அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ் என்பதன் உரிமையை நிறைவேற்றுபவர்களாக ஆக வேண்டும். மேலும் நாம் அல்லாஹுத்தஆலா ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கு நற்செய்தி வழங்கி இருந்த பின்னவர்களின் அந்த ஜமாஅத்தில் இணைய வேண்டும். அல்லாஹுத்தஆலா நமக்கு அதற்கான நல் வாய்ப்பை வழங்குவானாக.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ

اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ

اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ

وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)